Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
.............
நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அரூர்

**வழக்கு எண். CC 5/2026**

வழக்கு சாட்சி எண். PW9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சரவணன் | கிராமம் | : | தீர்த்தமலை |
| தந்தை பெயர் | : | ராமன் | தாலுக்கா | : | அரூர் |
| வயது | : | 35 | மாவட்டம் | : | தருமபுரி |

(எதிரி சிறையிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். ).

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **7th** Day of **May 2026.**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது தீர்த்தமலையில் வசித்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். எனது பக்கத்து ஊரைச்சேர்ந்தவர்.

ஆஜர் எதிரியை நான் அடிக்கடி ஊரில் பார்த்திருக்கிறேன். இன்று என்னிடம் காண்பிக்கப்படும் எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர்களில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதல்ல. அதில் என்ன எழுதியுள்ளது என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

(மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கக்கோரி அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் பிறழ்சாட்சியாக பாவித்து அரசு தரப்பில்

குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது).

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எங்கள் பக்கத்து ஊரைச்சேர்ந்தவர் என்றால் சரிதான். எதிரியை நான் அடிக்கடி பார்ப்பேன் என்றால் சரிதான்.

கடந்த 04.01.2026ம் தேதி காலை 11 மணியளவில் தீர்த்தமலை வனத்துறை சோதனைச்சாவடி அருகே கோட்டப்பட்டி காவல் நிலைய போலீசார் ஆஜர் எதிரியை என் முன்னிலையில் கைது செய்து விசாரணை செய்தார்கள் என்றும், எதிரி இவ்வழக்கின் குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும், அன்றைய தினமே 12.45 மணியளவில் எதிரி தன்னிடம் இருந்த பணம் ரூ.35,000ம் மேலும் தங்க காசுகள் 4 மற்றும் தான் ஓட்டிவந்த TN 29 BT 9097 என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தையும் ஆஜர்படுத்த என் முன்னிலையில் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார்கள் என்றும், அந்த கைப்பற்றுதல் மகசரிலும் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றும் போலீஸ் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் சொல்லிவிட்டு தற்போது எதிரி எங்கள் பக்கத்து ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு சாதகமாக மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் அரூர்.**